## May 17, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வெளிநாடுகளில் இருந்து வெள்ளி இறக்குமதி செய்யகடும் கட்டுப்பாடுகளை மத்திய அரசு விதித்தது.

(i) வெள்ளிக் கட்டிகள், உலோகம் உள்ளிட்ட வெள்ளி வகைகளை இறக்குமதி செய்வதற்கு எளிமையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வந்த நிலையில், தற்போது இறக்குமதி கொள்கையின்கீழ் அவற்றுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

(ii) இதுதொடர்பாக மத்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'திருத்தப்பட்ட இறக்குமதி கொள்கையின் கீழ் வெள்ளிக் கட்டிகள், பதப்படுத்தப்படாத வெள்ளி, தூள் வடிவிலான வெள்ளி உள்ளிட்ட வெள்ளி வடிவங்களின் இறக்குமதிக்கு மத்திய அரசிடம் கட்டாயம் ஒப்புதல் பெற வேண்டும்.

(iii) ரிசர்வ் வங்கியின் விதிகளைப் பின்பற்றி மட்டுமே குறிப்பிட்ட வெள்ளி வகைகளை இறக்குமதி செய்யும் வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iv) வெளிநாடுகளில் இருந்து விலைமதிப்பற்ற உலோகங்களை அதிக அளவில் இறக்குமதி செய்வதை தடுக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(v) முன்னதாக, தங்கம் மற்றும் வெள்ளி மீதான இறக்குமதி வரியை 6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக மத்திய அரசு அதிகரித்தது. அதைத் தொடர்ந்து, முன்கூட்டிய அங்கீகாரத் திட்டத்தின்கீழ் ரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் ஏற்றுமதியாளர்கள் வரியின்றி தங்கத்தை இறக்குமதி செய்வதற்கான விதிகளையும் அந்நிய வர்த்தக தலைமை இயக்குநரகம் கடுமையாக்கியது. அதன்படி, ஓர் உரிமத்துக்கு தங்கம் இறக்குமதி செய்வதற்கான உச்சவரம்பு 100 கிலோவாக நிர்ணயிக்கப்பட்டது.

(vi) மாதந்தோறும் அறிக்கை:

- இந்த சலுகைகளை முதல்முறையாக பெற விண்ணப்பிப்பவராக இருப்பின் உற்பத்தி ஆலைகளை அதிகாரிகள் நேரடியாகக் கண்காணித்த பிறகே அனுமதி வழங்கவும் தெரிவிக்கப்பட்டது. அதேபோல் முந்தைய உரிமங்களின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒப்புதல்களில் 50 சதவீதத்தை ஏற்றுமதி செய்திருந்தால் மட்டுமே இலவச அங்கீகாரம் அளிக்கப்படும்.
- மேலும், வரியின்றி தங்கத்தை இறக்குமதி செய்வோர் கணக்குத் தணிக்கையாளர்களின் உதவியோடு மாதம் இருமுறை மத்திய அரசுக்கு உரிய அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இந்த அறிக்கையை மாதந்தோறும் அந்நிய வர்த்தக வெளிநாட்டு தலைமை இயக்குரகத்துக்கு நிறுவனங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
- 2025-26-ஆம் நிதியாண்டில் இந்தியாவின் தங்க இறக்குமதி ரூ.6.9 லட்சம் கோடியாக அதிகரித்த நிலையில் தங்கம் இறக்குமதிக்கான வரியை அதிகரித்து மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டது.

2. போயிங் நிறுவனத்திடம் இருந்து 200 விமானங்களை வாங்க சீனா ஒப்புக்கொண்டிருப்பதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார். சீனாவில் அமெரிக்க அதிபர் டிரம்ப் அண்மையில் சுற்றுப்பயணம் செய்தார். அப்போது அமெரிக்க நிறுவனங்கள்- சீனா இடையே பல்வேறு வர்த்தக உடன்படிக்கைகள் கையொப்பமாகின. இதில் உலகின் முன்னணி விமானத் தயாரிப்பு நிறுவனமான அமெரிக்காவைச் சேர்ந்த போயிங் நிறுவனத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமும் ஒன்றாகும்.

(i) அமெரிக்க அதிபராக டிரம்ப் 2-ஆவது முறையாகப் பதவியேற்ற பிறகு, அமெரிக்க உற்பத்தித் துறைக்கு போயிங் நிறுவனம் மூலம் மீண்டும் புத்துயிர் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறார். ஓராண்டுக்கு முன்பு டிரம்ப் மத்திய கிழக்கு நாடுகளில் சுற்றுப்பயணம் செய்தபோது, கத்தார் நாட்டின் கத்தார் ஏர்வேஸ் நிறுவனம் போயிங்கிடம் 210 விமானங்களை வாங்க ஒப்புக்கொண்டது. சவூதி அரேபியா நாடும் போயிங் விமானங்களை வாங்க ஒப்புக்கொண்டது. இதேபோல், டிரம்ப் சுற்றுப்பயணத்தின்போது தென்கொரியா நாடு 100 போயிங் விமானங்களையும், துருக்கி நாடு 225 போயிங் விமானங்களையும், துபை 135 விமானங்களையும் வாங்க சம்மதித்தது குறிப்பிடத்தக்கது.

3. ரஷிய அதிபர் விளாதிமீர் புதின், சீனாவில் அடுத்த வாரம் அரசு முறை சுற்றுப்பயணம் மேற்கொள்ள இருப்பதாக அந்த நாட்டு அதிபர் மாளிகை அறிவித்தது.

(i) 'சீனாவில் அமெரிக்க அதிபர் டிரம்ப் சுற்றுப்பயணம் செய்து திரும்பிய 24 மணி நேரத்தில் இந்த அறிவிப்பு திடீரென

வெளியிடப்பட்டுள்ளது.

(ii) உக்ரைன்- ரஷியா இடையே 4 ஆண்டுகளுக்கும் மேலாக போர் நீடிக்கிறது. இந்தப் போரில் நடுநிலை வகிப்பதாக சீனா தெரிவித்தபோதிலும், ரஷியாவுக்கு ஆயுத உதவி உள்ளிட்டவற்றை மறைமுகமாக அளித்து வருவது பலமுறை உறுதியாகியுள்ளது. இதேபோல், மத்திய ஆசியாவில் ஈரான், அமெரிக்கா-இஸ்ரேல் இடையேயான போரிலும் ஈரானுக்கு பலவகையான உதவிகளை சீனா அளித்து வருவதாக தகவல்கள் வெளியான படி உள்ளது.

(iii) இந்தச் சூழ்நிலையில், சீனாவில் அமெரிக்க அதிபர் டிரம்ப், அந்த நாட்டு அமைச்சர்கள் உள்ளிட்டோர் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டனர். அப்போது உக்ரைன் போர், மத்திய ஆசிய போர் உள்ளிட்டவை குறித்து சீன அதிபரும், டிரம்ப்பும் ஆலோசனை நடத்தியதாகக் கூறப்படுகிறது. இந்தப் பயணத்தை முடித்துக் கொண்டு சீனாவிலிருந்து டிரம்ப் புறப்பட்ட 24 மணி நேரத்துக்குள் ரஷிய அதிபர் மாளிகையான கிரெம்ளின் புதிய அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

(iv) அதில், 2001-ஆம் ஆண்டில் சீனா-ரஷியா இடையே நட்புறவு ஒப்பந்தம் கையொப்பமானது. இதன் 25-ஆவது ஆண்டு விரைவில்வர விருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், சீனாவில் புதின் மே 19-ஆம் தேதியும், 20-ஆம் தேதியும் சுற்றுப்பயணம் செய்ய இருக்கிறார். இந்தப் பயணத்தின்போது சீன அதிபரும், புதினும் இருத்ரப்பு விவகாரம் குறித்து ஆலோசனை நடத்துவர். அதேபோல், சர்வதேச விவகாரம், பிராந்திய விவகாரம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு குறித்தும் பேச்சுவார்த்தை நடத்துவர்' எனக் கூறப்பட்டுள்ளது.

4. சர்வதேச சந்தையில் தங்கம் விலை உச்சத்தில் இருக்கும் போதிலும், இந்தியாவில் கடந்த ஏப்ரல் மாதத்தில் தங்கம் இறக்குமதி வருடாந்திர கணக்கில் 81.69 சதவீத வளர்ச்சியுடன், 562 கோடி டாலராக அதிகரித்துள்ளது.

(i) இதேபோல், இறக்குமதியும் 157.16 சதவீதம் அதிகரித்து, வெள்ளி 41.1 கோடி டாலரை எட்டியுள்ளது.

(ii) இந்தியாவின் ஒட்டுமொத்த இறக்குமதியில் தங்கம் மட்டுமே 5 சதவீதத்துக்கும் மேல் பங்கைக் கொண்டுள்ள நிலையில், அதன் இறக்குமதி இவ்வாறு கணிசமாக அதிகரித்துள்ளதால், நாட்டின் வர்த்தக பற்றாக்குறை 3 மாதங்களில் இல்லாத அளவுக்கு 2,838 கோடி டாலராக அதிகரித்துள்ளது.

(iii) ஸ்விட்சர்லாந்து தொடர்ந்து முதலிடம்:

- இந்தியாவின் ஒட்டுமொத்த தங்கம் இறக்குமதியில் ஸ்விட்சர்லாந்து 40 சதவீத பங்களிப்புடன் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறது. இதற்கு அடுத்தபடியாக யுஏஇ (16 சதவீதம்), தென்னாப்பிரிக்கா (10 சதவீதம்) ஆகிய நாடுகள் உள்ளன. கடந்த ஏப்ரல் மாதத்தில், ஸ்விட்சர் லாந்திலிருந்து மட்டும் தங்கம் இறக்குமதி 26.73 சதவீதம் அதிகரித்து, 147 கோடி டாலரை எட்டியுள்ளது.

(iv) முழு நிதியாண்டு நிலவரம்:

- கடந்த 2025-26 முழு நிதியாண்டில், இந்தியாவின் தங்கம் இறக்குமதி மதிப்பு அடிப்படையில் 24 சதவீதம் அதிகரித்து, 7,198 கோடி டாலர் என்ற புதிய வரலாற்று உச்சத்தைத் தொட்டது. ஆனால், அளவு அடிப்படையில் தங்கம் இறக்குமதி 4.76 சதவீதம் குறைந்து, 721.03 டன்னாக சரிந்துள்ளது.
- முன்னதாக, 2023-24-இல் 795 டன்னாகவும், 2024-25-இல் 757 டன்னாகவும் இருந்த இறக்குமதி அளவு, உயர் விலை காரணமாக கடந்த நிதியாண்டில் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(v) சுங்க வரி உயர்வு:

- எனினும், தங்கம், வெள்ளியின் இறக்குமதி மதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருவதால், நாட்டின் அந்நியச் செலாவணி சேமிப்பு பாதிக்கப்படுகிறது. எனவே, இதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக, தங்கம் மற்றும் வெள்ளி மீதான இறக்குமதி சுங்க வரியை 6 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக மத்திய அரசு அதிரடியாக உயர்த்தியுள்ளது.
- இப்புதிய வரி விதிப்பு கடந்த புதன்கிழமை முதல் அமலுக்கு வந்துள்ளது. 'சுங்க வரி உயர்த்தப்பட்டுள்ளதால், நடப்பு நிதியாண்டில் தங்கம், வெள்ளி இறக்குமதி மற்றும் நுகர்வுத் தேவை நிச்சயம் குறையும்; எனினும், வெள்ளியின் தொழில் துறை பயன்பாடு அதிகமாக இருப்பதால், அதன் மீதான தாக்கம் சற்றே குறைவாக இருக்கலாம்' என்று வர்த்தக செயலர் ராஜேஷ் அகர்வால் தெரிவித்தார்.

(vi) யுஏஇ ஒப்பந்தத்தால் தாக்கமில்லை:

- இந்தியா-ஐக்கிய அரபு அமீரகம் (யுஏஇ) இடையிலான பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தத்தின்கீழ், 1 சதவீத வரி சலுகையுடன் தங்கம் இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.
- இதுகுறித்து விளக்கமளித்த ராஜேஷ் அகர்வால், 'கடந்த 2025-26 நிதியாண்டில் இச்சலுகை வரம்பின்கீழ் 800 கோடி டாலர் மதிப்பிலான தங்கம் இறக்குமதி செய்ய அனுமதி இருந்தும், வெறும் 1 டன் தங்கம் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்த ஒப்பந்தத்தால் இந்தியாவின் ஒட்டுமொத்த தங்கம் இறக்குமதியில் எவ்வித பெரிய தாக்கமும் ஏற்படவில்லை' என்றார்.

5. சிக்கிமின் 51-ஆம் ஆண்டு மாநில தினத்தை யொட்டி, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி, முதல்வர் பிரேம் சிங் தமாங் உள்ளிட்டோர் சனிக்கிழமை வாழ்த்து தெரிவித்தனர்.

(i) மன்னராட்சியில் இருந்த சிக்கிம், கடந்த 1975, மே 16-ஆம் தேதி இந்தியாவின் முழு மாநிலமாக இணைந்தது. சிக்கிமின் 51-ஆம் ஆண்டு மாநில தினம் சனிக்கிழமை கொண்டாடப்பட்டது.

6. இராக்கின் புதிய பிரதமராகப் பதவியேற்ற அலி ஃபாலி காதிம் அல்-ஜைதிக்கு பிரதமர் நரேந்திர மோடி சனிக்கிழமை வாழ்த்து தெரிவித்தார்.

(i) தொழிலதிபரான அல்-ஜைதி, இராக்கின் அடுத்த அரசை வழிநடத்தும் இணக்கமான வேட்பாளராக உறுப்பு கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டமைப்பு சார்பில் ஒரு வார காலம் நடைபெற்ற உள் கட்சி விவாதங்களுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர், அவரின் நியமனதுக்காக நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பிலும் அவர் வெற்றிபெற்றார். அதைத் தொடர்ந்து, இராக்கின் புதிய பிரதமராக அவர் பதவியேற்றார்.

7. நாடு முழுவதும் 736 அணைகள் ரூ.10,211 கோடியில் சீரமைக்கும் திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இதுகுறித்து மத்திய நீர்வளத் துறை (ஜல்சக்தி) அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

(i) உலக அளவில் அதிக அணைகள் உள்ள நாடுகள் பட்டியலில், 6,628 அணைகளுடன் 3-ஆவது இடத்தில் இந்தியா உள்ளது. இதில் 6,545 அணைகள் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ளன. 83 அணைகள் புதிதாக கட்டப்பட்டு வருகின்றன. இந்த அணைகளில் மொத்தம் 330 பில்லியன் க்யூபிக் மீட்டர் நீரை சேமிக்க முடியும்.

(ii) அணைகள் சீரமைப்பு மற்றும் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.5,053 கோடியில் 191 அணைகளை சீரமைக்கும் திட்டங்களுக்கு ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதில் கடந்த 2025-ஆம் ஆண்டு மார்ச் 31-ஆம் தேதி வரை 43 அணைகள் சீரமைக்கப்பட்டுவிட்டன.

(iii) இந்தத் திட்டத்தின் 2-ஆவது மற்றும் 3-ஆவது கட்டம் 2021- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் செயல்படத் இதில் 19 மாநிலங்களில் உள்ள தொடங்கியது. 736 அணைகளை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த 2-ஆவது மற்றும் 3-ஆவது கட்ட சீரமைப்புக்கு மொத்தம் ரூ.10,211 கோடி மதிப்பில் திட்டம் தயாரிக்கப்பட்டது. இதில் 2-ஆவது கட்டத்துக்கு ரூ.5,107 கோடியும், 3-ஆவது கட்டத்துக்கு ரூ.5,104 கோடியும் ஒதுக்க தீர்மானிக்கப்பட்டது. இந்த ரூ.10,211 கோடியில் ரூ.7,000 கோடியை வெளிநாடுகளில் இருந்து நிதியுதவியாக பெறுவது எனவும், எஞ்சிய ரூ.3,211 கோடியில் மத்திய அரசும், மாநில அரசுகளும் பங்களிப்பு செய்வது எனவும் முடிவு செய்யப்பட்டது என கூறப்பட்டுள்ளது.

8. இதுவரை இல்லாத வகையில் ரூ.182 கோடி மதிப்பிலான 'ஜிஹாதி போதைப் பொருள்' என்றழைக்கப்படும் கேப்டகன் போதை மருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார். இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் அவர் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

(i) 'ஆபரேஷன் ராகேபில்' என்ற நடவடிக் கையின் கீழ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு மேற்கொண்ட தீவிர கண்காணிப்பு மற்றும் சோதனையில், இதுவரை இல்லாத வகையில் ரூ.182 கோடி மதிப்பலான 227.7 கிலோ எடையுடைய 'ஜிஹாதி போதைப் பொருள்' என்றழைக்கப்படும் கேப்டகன் போதை மருந்துகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

(ii) இந்தியா வழியாக மத்திய கிழக்கு நாடுகளுக்கு கடத்தப்பட விருந்த நிலையில், இந்த போதை மருந்து சரக்கு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அதைக் கடத்த முயன்ற வெளிநாட்டு நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். போதைப் பொருளுக்கு எதிராக கொள்கையை சகிப்புத்தன்மையற்ற இந்தியா கொண்டுள்ளது என்பதற்கு இந்த நடவடிக்கை சிறந்த எடுத்துக்காட்டாகும்.

9. நாடாளுமன் றத்தின் 16 நிலைக் குழுக்கள் மற்றும் இந்திய பொதுகணக்கு குழுவின் ஆலோசனைக் கூட்டங்களில் சராசரியாக 53 சதவீத உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்பதாக மக்களவை வலைதள தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

(i) கடந்த செப்டம்பர் மாதம் பெரும்பாலான நாடாளுமன்ற நிலைக் குழுக்கள் மறுசீரமைக்கப்பட்ட நிலையில், அதில் பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக விவாதிக்க ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெற்றன.

(ii) நாடாளுமன்ற நிலைக் குழுவில் 31 உறுப்பினர்கள் இடம் பெறுவர். இதற்கு மக்களவையில் இருந்து 21 உறுப்பினர்களும் மாநிலங்களவையில் இருந்து 10 உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

(iii) அதேபோல் இந்திய பொது கணக்கு குழுவானது, மக்களவையில் இருந்து 15 உறுப்பினர்களையும் மாநிலங்களவையில் இருந்து 7 உறுப்பினர்களையும் கொண்டது. இந்நிலையில், இந்தக் குழுக்களின் ஆலோசனைக் கூட்டங்கள் குறித்து மக்களவை வலைதள தரவுகளில் கூறப்பட்டிருப்பதாவது:

- மத்திய வேளாண் அமைச்சகம், உணவு மற்றும் நுகர்வோர் விவகாரங்கள், ரசாயனங்கள் மற்றும் உரங்கள், எரிசக்தி, சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தில் உள்ளிட்ட 16 துறை ரீதியான நாடாளுமன்ற நிலைக் குழுக்களின் ஆலோசனைக் கூட்டங்களில் சராசரியாக 53 சதவீத உறுப்பினர்கள் மட்டுமே பங்கேற்றுள்ளனர். 47 சதவீத உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை.
- ரயில்வே, பெட்ரோலியம் மற் றும் இயற்கை எரிவாயு, வெளியுறவு விவகாரங்கள் மற்றும் நிதித் துறைக்கான நாடாளுமன்ற நிலைக் குழுக்களின் ஆலோசனைக் கூட்டங்களில் குறிப்பிடத்தக்க அளவில் உறுப்பினர்கள் இடம்பெறுகின்றனர்.
- 11 உறுப்பினர்கள் கலந்து கொண்டால் மட்டுமே நாடாளுமன்ற நிலைக் குழுக்களின் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தமுடியும். ஆனால், போதியளவிலான உறுப்பினர்கள் பங்கேற்காததால் கடந்த ஆண்டு செப்டம்பரில் இருந்து இந்த குழுக்களின் 5 ஆலோசனைக் கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.
- நாடாளுமன்ற நிலைக் குழுக்களின் ஆலோசனைக் கூட்டங்களில் இரு அவை உறுப்பினர்களும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என பிரதமர் நரேந்திரமோடி தொடர்ந்து வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

10. முன்னெப்போதும் இல்லாத அளவில் முன்னேறம் கண்டுவரும் இன்றைய இந்தியாவின் லட்சியங்களுக்கு எல்லையே கிடையாது' என்று பிரதமர் நரேந்திர மோடி பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

(i) நெதர்லாந்தின் தி ஹேக் நகரில் இந்திய சமூகத்தினர் மத்தியில் பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார். வளைகுடா நாடான ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் ஐரோப்பிய நாடுகளான நெதர்லாந்து, ஸ்வீடன், நார்வே, இத்தாலி என 5 நாடுகளுக்கான 6 நாள்கள் அரசுமுறைப் பயணத்தை பிரதமர் மோடி தொடங்கினார். முதல்கட்டமாக ஐக்கிய அரபு அமீரக பயணத்தை நிறைவு செய்த அவர், அங்கிருந்து நெதர்லாந்துக்கு வந்தடைந்தார்.

(ii) 125 யுனிகார்ன் நிறுவனங்கள்:

- சர்வதேச உற்பத்தி மையமாகவும், பசுமை எரிசக்தித் துறையில் உலகின் தலைவராகவும், உலக வளர்ச்சிக்கான உந்துசக்தியாகவும் உருவெடுக்க விரும்பும் இந்தியா, ஒலிம்பிக் போட்டியையும் நடத்த முனைகிறது.
- கடந்த 2014-இல் இந்தியாவில் வெறும் 4 'யுனிகார்ன்' (100 கோடி டாலருக்கும் மேற்பட்ட மதிப்புடையவை) புத்தாக்க நிறுவனங்களே இருந்தன. இப்போது சுமார் 125 'யுனிகார்ன் நிறுவனங்கள் செயல்படுகின்றன.
- செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், பாதுகாப்பு, விண்வெளி என முக்கியத் துறைகளில் இந்திய புத்தாக்க நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க பணிகளை மேற்கொள்கின்றன. இத்தகைய ஆராய்ச்சிகளும், புத்தாக்கங்களும் மிகவும் மதிப்புடையவையாக மாறியுள்ளது. புத்தாக்க நிறுவனங்களின் எண்ணிக்கையில் உலகின் மூன்றாவது மிகப் பெரிய நாடாக இந்தியா திகழ்கிறது.

(iii) சோழர் கால செப்பேடுகள் திரும்ப ஒப்படைப்பு

- நெதர்லாந்தில் பாதுகாக்கப்பட்டு வந்த மாமன்னர்கள் ராஜ ராஜ சோழன் மற்றும் ராஜேந்திர சோழன் காலத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற ஆனைமங்கலம் செப்பேடுகள், தி ஹேக் நகரில் பிரதமர் மோடி முன்னிலையில் இந்தியாவிடம் திரும்ப ஒப்படைக் கப்பட்டன.
- 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த 21 செப்பேடுகளும் கடந்த 1,700-களில் டச்சு ஆளுகையின்போது நாகப்பட்டினத்துக்கு கிறிஸ்தவ மதப் பணிக்காக வந்த ஃபுளோரன்டியஸ் கேம்பர் என்பவரால் அந்நாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

- *சோழப் பேரரசின் மிக முக்கிய வரலாற்றுப் பதிவுகள் என்பதுடன் தமிழக வரலாற்றின் பொக்கிஷ புதையலான இந்தச் செப்பேடுகள், நெதர்லாந்தின் லைடென் பல்கலைக்கழகத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தன. இவற்றை மீட்டு இந்தியாவுக்கு கொண்டுவர வேண்டுமென்ற கோரிக்கைகள் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வந்தன. தமிழ், சம்ஸ்கிருத மொழிகளைக் கொண்ட 21 செப்பேடுகளும் சுமார் 30 கிலோ எடையுள்ளவை; ஒரு செப்பு வளையத்தால் பிணைக்கப்பட்டுள்ளன. அந்த வளையத்தில் ராஜேந்திர சோழனின் முத்திரை பொறிக்கப்பட்டுள்ளது. ஹிந்து மத மன்னரான ராஜ ராஜ சோழன், பௌத்த மடாலயத்துக்கு அறக் கொடைகளை வழங்கிய தகவல்கள் செப்பேடுகளில் இடம்பெற்றுள்ளன*